

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி ஒடுக்கத்தூர் பேரூராட்சி பகுதியில் "மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் மாவட்டகழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு , ஒன்றிய செயலாளர்கள் பி.வெங்கடேசன் கோ.குமரபாண்டியன் பேரூராட்சி செயலாளர் பெருமாள்ராஜா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிராகாஷ் தாசில்தார் வேண்டா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் – நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு,நிதி மற்றும் மனிதவள மேலாண்மைதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் ரூபாய் 53.14 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் வணிக வளாகம் 1,2 மற்றும் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மேயர் (பெ)ராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு தினம்!

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் அமைதி பேரணி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஆக 5 -

உலக தமிழர்கள் போற்றும் உன்னத தலைவர் பன்முகம் கொண்டவர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு வரும் 7ஆம் தேதி மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் அமைதி பேரணி நடைபெற உள்ளதால், இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்குமாறு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்து ள்ளார், அதன் விபரம்.



காலங்கள் பல கடந்தாலும் கலைஞர் புகழ் தொடரும் என்பதில் சிறிதும் மாற்றமில்லை, முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் உலகத் தமிழர்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும், செம்மொழி கண்டவர், கவிதை, கதை, நாடகம் அரசியல், ஆட்சி என பல்வேறு சாதனைகள் என பன்முகத் தன்மைகள் கொண்டவர், உலகமே போற்றும் உன்னத தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினம் வருகிற 07.08.2024 புதன்கிழமை அனுசரிக்கப் பட உள்ளது.

அது சமயம் மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் அமைதிப் பேரணி காலை 10 மணி அளவில் முன்னாள் பத்திரப்பதிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் வரை அமைதி பேரணியாக அணிவகுத்து வந்து, அங்கு அண்ணா சிலை முன்பாக வண்ண மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது. இந்த சிறப்புமிக்க அமைதிப் பேரணியில் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக, செயலாளர்கள், நிர்வாகி கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு தினம்

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தே.கல்லுப்பட்டியில் மாபெரும் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஆக 5 -

உலக தமிழர்கள் ஒன்று சேர்ந்து போற்றக்கூடிய நாடு போற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினம் வருகிற ஏழாம் தேதி நடைபெறுவதையொட்டி மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தே.கல்லுப்பட்டியில் மாபெரும் அமைதி பேரணி நடத்தி கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்குமாறு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார், அதன் விபரம்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் உலகம் முழுவதும் இன்றும் என்றும் புகழ் பாடும் என்பதில் மாற்றமில்லை. தமிழர்கள், தமிழ் மொழி என தன் இறுதி மூச்சு உள்ளவரை அயராது பாடுபட்ட தலைவர் கலைஞர் பல்வேறு துறைகளில் உலகத்தில் எவரும் சாதிக்க முடியாதவற்றை எல்லாம் சாதித்து, சாதனை கண்டு மக்களால் பாராட்டு பெற்று உலகப் புகழ் பெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினம் வருகிற 07.08.2024 ஆம் தேதி புதன்கிழமை மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

அதனையொட்டி அன்று காலை 8 மணி அளவில் திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி பிரிவிலிருந்து



தே.கல்லுப்பட்டி பேரூராட்சி அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அருகில் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பிரமாண்டமாக காட்சியளிக்கும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதால் இந்நிகழ்வில் மதுரை தெற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

### க.இராஜேந்திரன் தலைமை!

# பண்ருட்டி நகர கழக செயற்குழுக் கூட்டம்!

## கொ.நந்தகோபாலகிருஷ்ணன் சிறப்புரை!

கடலூர், ஆக. 5 -

பண்ருட்டி நகர தி.மு.க, செயற்குழுக் கூட்டம், நேற்று ( 04.08.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணியளவில், கே.எஸ்.ஆர். தனியார் திருமண மண்டபத்தில், நகர கழக செயலாளரும், பண்ருட்டி நகர மன்ற தலைவருமான, க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

நகர கழக பொருளாளர் ஆர்.கே.இராமலிங்கம் வரவேற்புரையாற்றினார். நகர அவைத் தலைவர் ஆர். ராஜா, நகர மன்ற துணை தலைவர் ஏ.சிவா, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.சரவணன், ஆர்.டி.ஆர். பிரபு, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கே. பரணிசந்தர், டி.சசிக் குமார், இளைஞரணி அமைப்பாளர் ஏ.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.

இதில் கடலூர் மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.எஸ்.எம். தணிக்கைசெல்வம், நகர மன்ற உறுப்பினர்கள் பிரமேஷ், நிர்வாகிகள் மணி, பானுமதி பழனிச்சாமி சண்முகவள்ளி பழனி மதியழகன் லாவண்யா முத்துவேல் ,

கிளைக் கழக செயலாளர்கள் பி.லட்சுமணன், எம்.முகமது இப்ராஹிம், கே.ஆனந்தன், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, வி.ஆறுமுகம், ஜி.ஆறுமுகம், என்.பாலமுருகன், எம்.ரங்கநாதன்,கே.கதிரேசன், கே.அன்பரசன்,டி.ஆர்.ராஜு, ஏ.ஆர். அப்துல் ஹமீது, எஸ்.ராஜா, ஆர்.மகாராஜா, ஏ.சுரேஷ், எஸ்.செல்வகுமார், ஜே. நாகப்பன், எஸ்.சங்கர், கே.கிருஷ்ண மூர்த்தி, ஜே.முருகன், என்.வேணுகோபால், என்.செல்வகணபதி, ஏ.அந்தோணி ராஜ், வி.செல்வம், ஆர்.குபேந்திரன், சோழன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் எம்.எஸ்.ராம்குமார், ஏ. எம்.சங்கர், பி.பாரி, பி.மகாலிங்கம், எஸ்.செந்தில்குமார், ஏ.வி.லோகநாதன், வி.ஏழுமலை, நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.பார்த்திபன், டி.ராஜா, ஆர்.கிரி, தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் பி.மோகன், பி.பாலாஜி, பி.எஸ்.இலக்கியா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு, அமைதிப் பேரணியாக சென்று, மலரஞ்சலி, புகழஞ்சலி செலுத்தப்பட உள்ளது. நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் 100 சதவிதம் வெற்றிக்கு வித்திட்ட, கழக தலைவரும், முதல்வருமான தளபதி மு.க. ஸ்டாலின், இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, பாராட்டப்பட்டது. நாடாளுமன்ற தேர்தலில் சிறப்பாக பணி யாற்றிய பண்ருட்டி நகர கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரையும் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகர இளைஞரணி துணை அமைப்பாளர் கே.பால ச் சந்தர் நன்றியுரையாற்றினார்.



பண்ருட்டி நகர தி.மு.க. ஆலோசனைக் கூட்டம், நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். ஆர்.எஸ்.எம்.தணிக்கைசெல்வம், ஆர்.கே.இராமலிங்கம், ஆர்.ராஜா,ஏ.சிவா, ஆர்.சரவணன், ஆர்.டி.ஆர். பிரபு, கே.பரணிசந்தர், ஜி.சீனுவாசன், டி.சசிக்குமார், ஏ.சம்பத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஆக. 5 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகிற 7 ம்தேதி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் காலை 9 மணி அளவில் திசையன்விளை நேரு திடல் முன்பு அமைதி பேரணி ஆரம்பித்துதிசையன்விளை பழைய பேருந்து நிலையம் முன்பு முடிவடையும். அதன் தொடர் நிகழ்வாக அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

நெஞ்சம் நிறைந்து வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் வருகின்ற ஆகஸ்ட் 7ஆம் தேதி ஆகும். தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும்,தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காகவும்,தான் ஆட்சி செய்த போதெல்லாம் நாளும் பல நல்ல திட்டங்களை சமுதாயத்தில் அடித்



தட்டு மக்களுக்கு தந்தவர். நம் நெஞ்சம் நிறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய எழுத்துக்களாலும் ஆட்சி காலத்தில் செய்த நலதிட்டங்கள் மூலமாகவும் இன்றும் தமிழக மக்களின் நெஞ்சில் குடி கொண்டுள்ளார்கள்.

வரலாறுகளை படைப்பதில் நாயகராக இருந்து இந்திய வரலாற்றில் ஒட்டு மொத்த இந்திய தலைவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை சந்திக்க கோபாலபுரம் இல்லம் வந்தார்கள். இவ்வாறு அனைத்து தரப்பினரின் அன்பை பெற்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை எல்லாம் மீளா துயரத்தில் ஆழ்த்தி விட்டு 07.08.2018 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அருகில் துயில் கொள்ள சென்று விட்டார்கள்.

வாழும்போது போராட்ட களம் கண்டது போல் தான் மறைந்த போதும் சட்டப் போராட்ட களம் கண்டார்.

தமிழினத்தை காப்பதற்காக தனக்குப் பின்னால் நம் கழகத் தலைவர் -முதலமைச்சர் அவர்களை நமக்கு வழிகாட்டியாக சுட்டிக் காட்டி சென்றுள்ளார். கழகத் தலைவர் அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைப் போல் தமிழக மக்களின் நலனுக்காக நாளும் உழைத்து வருகிறார்.நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றும் வகையில்,

வருகின்ற 07.08.2024 காலை 9 மணி அளவில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் எனது தலைமையில் திசையன்விளை நேரு திடல் முன்பு அமைதி பேரணி ஆரம்பித்துதிசையன்விளை பழைய பேருந்து நிலையம் முன்பு முடிவடையும். அதன் தொடர் நிகழ்வாக அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில அணி நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,இராதபுரம் கிழக்கு, மேற்கு,ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், திசையன்விளை பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், நகர்ப்புற, ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழகத்தோழர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுபோன்று திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர்,கிளை,வார்டு, கழக உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து மலர் தூவியும் புகழஞ்சலி செலுத்த கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் அந்த பகுதியை சேர்ந்த ஒன்றிய,நகர,பேரூர்,கிளை, வார்டு,செயலாளர்கள்,நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள்,நகர்புற,ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சார்பு அணிகளுடைய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத்தோழர்கள் உள்பட அனைவரும் தவறாது புகழஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நினைவை போற்ற வேண்டும்.என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


### முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக. 5-

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நிளனவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூக நீதி கொள்கைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களு



டைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும். ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கவைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் 07.08.2024 அன்று புதன்கிழமை காலை புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, வட்டம், மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும்.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள். முன்னாள். இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள். முன்னாள். இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருச்சியில் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 219 வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள அவரது உருவ சிலைக்கு திமுக. சார்பில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மேயர் அன்பழகன் ஆகியோர் தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் சேர்மன் துரைராஜ், பகுதி செயலாளர்கள் காஜாமலை விஜய், மோகன்தாஸ், இளங்கோ, நாகராஜன், திருச்சி மண்டல தொ.மு.ச. பொதுச்செயலாளர் குணசேகரன், கவுன்சிலர்கள் விஜயா ஜெயராஜ், ஜெ. கலைச்செல்வி, ராமதாஸ், வட்ட செயலாளர் மூவேந்திரன், பந்தல் ராமு, சிவா. முத்துப்பழனி, தர்மசேகர், சதீஷ்குமார், , தஸ்தகீர், மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.